ஸ்ரீ மாரியம்மன் பேரில் ஸ்தோத்திரம்.

C

O25:417
M14
149056

உ

கடவுள் துணை.

சென்னப்பநாய்க்கன்பாளையம் நடுவீரப்பட்டு

மந்தவெளியிலமர்ந்துள்ள

# ஸ்ரீ-மாரியம்மன்பேரில்

## ஸ்தோத்திரமும்,

இன்னும்

## திருக்கண்டீச்சரம் நடன பாதீஸ்வரர் பேரிலும் திருப்பதி வேங்கிடாஜலபதி பேரிலும் பழனியாண்டவர்பேரிலும் வைத்திநாதர் பேரிலும் இன்னும் அனேகசுவாமிகள்பேரிலும்

ஸ்தோத்திரங்கள் அடங்கியுள்ளது.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 10 AUG 1914 MADRAS

இஃது

நடுவீரப்பட்டு கோனேரி,

ம-ா-ஸ்ரீ வெங்கிடாஜல முதலியாரவர்கள்

இயற்றியதை,

ஆனத்தூர் பிரம்மஸ்ரீ, பிராமணசன்னியாசி

அவர்களால் பார்வையிடப்பட்டு

நெல்லிக்குப்பம்

R. வரதைய நாயுடு அவர்களது,
ஸ்ரீவரலட்சுமி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை 1914. 0-0-6

உ

ஸ்ரீ முத்தாலம்மன் துணை.



## வினாயகர் காப்பு.

ஆசிரிய விருத்தம்.

அம்பிகைக்கினியபாலனைங்கரக்கணேசன்றன்னை
நம்பியேயிருக்குமேழைநற்பொருளளிக்கவேண்டி
வம்பனேன்றனக்குயின்னாள் வந்தருள் புரியுஞ்செல்வ
தும்பிமாமுகவன்பாதந்துணையடிமுடிமேல்வைப்பாம்.

கலித்துறை.

காதலால்மனங்களிந்துகணபதிக்கழலைநாடி
பாதமேகதியென்றெண்ணி பன்மலரெடுத்துச்சேர்த்து
யோதவும்வினைந்துணைநந்தென்னுள்ளமுமுருகிதைய
நாயகிநாதன்றனை நான்பாடிநினைந்திட்டேனே.



சரஸ்வதிபேரில் விருத்தம்.

அன்னையேமலரில்வாழுமயன்றனக்கினியதேவி
என்னையேகார்க்கவேண்டி யெனக்கருள்செய்யவெண்ணி
உன்னையே வருந்துகின்றேனென் னுள்ளத்திரினைக்குந்தோறும்
முன்னமேவந்திருந்து முடித்திடுந்தாயேபோற்றி.

கலித்துறை

முத்தமிழ்தன்னால் முன்னோர்முடித்தனர் சிலது நூற்கள்
அத்தனைபின்னாள் கற்றோர் ஆய்ந்ததில் நூல்கள் சொன்னார்
பித்தனான் பார்த்துபார்த்துப் பேதையான் உளறுகின்றேன்
கற்றவர்மனம்பொறுக்க கழலுக்குசரணமென்றேன்.

வினாயகர்பேரில் எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நவைநகர் தென்கோடி தனிலமர் வினாயகாசரணமென்றே
நான்வந்தடைந்தனனாபாதமேகதியென்றனாடியுன்திருவடிக்கீழ்
அடிமையெனவந்தனனாபாதமேகதியென்று குட்டிகைகட்டிநின்று
ஐங்கரமுகத்தனே தும்பிமாமுகவனே ஆதிவல்லபைநேயனே

கொடுமையென் மேலொன் றும் வாராமல்யான்செய்தகுற்றந்தனை யகற்றி
குறைவற்றவீடுதனையெனக்கருளவேண்டுமெனகூறு மென்றெனை யாளு
[வாய்
வடிவுற்றமூஷியர் தன்மேல்நின் றுவலமதாய் வருகின் றவேளை தன்னில்
அடியார் துதிக்கமனமெளியேன் றனக்கருள வாருமைங்கரநாதனே.

கடையூமெழுந்தருளும் அமிர்தலிங்கேசுரை கண்டன்பர் தரிசிக்கவும்
கருத்துடனே மார்க்கண்டனீரெட்டுமாச்சுதே காலன்வருநாளாச்சுதே
விடைமேலெழுந்தருளுமனடியில்மலர்கொண்டுவிருப்புடனர்ச்சிக்கவும்
விரைவினில்காலன் வந்தன் பனையுமான் மீது வீசினன்பாசமதையும்

அடைவாளமாகவேயமனையுமுதைத்தவன் றன்பால் வரும்புதல்வனே
அடியவர்க்கருள்தருகமூஷிகர் தன்மேலேறி யடியேனையாண்டருளுவாய்
திடமுடனேவனமதனில் வாழ்கின் றயன்பருனைதெரிசிப்பதெந்தனுளோ
திருமருவுசென்னைபுரிமலைமீதிநடமிடுஞ் செல்வவைங்கரநாதனே.

வேதாகமங்கள்ஸிலரோதுந்திருச்சென்னை வெப்பம்பொருந்துமலைமேல்
மெய்யடியர்தெரிசிக்கமுன்னின் றநாயகனேவேண்டியெதிர்நின் றுரிகியே
ஆதாரமாகவேநிர்த்தகணபதிதன்னையவனிதனிலுர்ப்பவித்து
அன்புடனேயடியவர்க்கின்பவீடெய்துமெனயடிபணிந்தெதிரில்நின் று
ஓதாதவர்க்கருள்செய்யொண்ணுதபுதல்வனேயும்பர்கட்குத்தலைவனே
யுமைமைந்தனேபரமசிவன்மைந்தனேஎன துயூழ்வினையறுத்தருள் செயும்
சேதாரம்வாராம நின்னன்பர்களைக்கொண்டுதெரிசிக்கவரமருள்செயும்
திருமருவுசென்னைபுரிமலைமீதினடனமிடுஞ் செல்வவைங்கரநாதனே.

கயிலாயநாதர்பேரில் எண்சீர்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதாரமாகவே கைலையங்கிரிதனில் லன்புடனமர்ந்தலிங்கம்
யடிவர்தமக்கெலா மோக்ஷவீடுகள்தந்து யடியிணைசேர்த்தலிங்கம்
வேதாகமங்கள்சில ரோதுதிருவருணகிரி மேருவாய்நின் றலிங்கம்
வில்லியநூர்தனிலமர்ந்தலிங்கங்கொடியவிடந்தனைப்புசித்தலிங்கம்
சேதாரம்வாராமற் சிதம்பரந்தன்னிலே திருநடனஞ்செய்தலிங்கம்
திருவாரூர் தன்னிலே யாடுந் தியாகராய்ச் சிரப்புடனமர்ந்தலிங்கம்
மாதாபிதாயன்பர் நடுவைநகர்தன்னிலே வந்தடி பணிந்தலிங்கம்
வளர்மேவுகயிலாயநாதனுய் பேர்பெற்று வளர்ந்திடு மகாலிங்கமே.

## திருக்கண்டீச்சரம் நடனபாதீசுவரர் பேரில்

### விருத்தம்.

காதுக்கினிமையாய் பாடவுஞ் சுந்தரர் கருத்தினினைந்துருகவே
கடவுளாரெங்கென் றுதேடியும் வளர்திருக்கண்டீச்சரந் தன்னிலே
யேதுக்குநீர்வந்து பாடுநீரிச்சமய மெய்பொருளுங் கிடையாதுகா
ணென்கையிலிவ்வேளை யொருகாசுங்கிடையாதினியென்ன சொல்வதினி
வாதுக்கு நானுட அம்மன்தாளம்போட வருவித்து நீ பாடவும் [யாம்
வாமதலைபரியாவரும் மனதுசந்தோஷமாய் மகிழ்ந்திரு கரங்கூப்பியும்
யாதுக்குநானுட நீர்பாட சரியென் றதிக கூலியைத்தந்திடும்
ஸ்ரீ அஸ்ததாளாம்பிகையெனும் பெயரைபெற்றுவளரகிலநாயகியம்மையே

## ஸ்ரீ பழனியாண்டவர்பேரில்

கந்தன்குமரன் காங்கையனென் றுங் கடம்பனென் று
முந்தனமலர்ப் பதமியான்றொழுதேனூழ் வினையறுக்க

800 009-
149056

யெந்தாய்த்தகப்பனும் நீயல்லவோயேழையேன்வருத்தம்
வந்தாதரித்திடும் பழனியப்பாவுனை வாழ்த்துதற்கே

வாழும்பழநிமாமணியே யெந்தன்வல்வினையை
தீருமதீர்த்தருள்செய்திடவேண்டும்பழனிபுரிவாழ்
கூறுமடியவர் துன்பமுமவர்கள்மனக்குறையும்
பாருங்கடைக்கண்ணாலவர் செய்ததுன்பம்பரப்பதற்கே

வையாபுரியென்றும்பழனியப்பாவென்றுமவர்கள் வாக்கதனால்
மெய்யாயுரைத்திடயுன்செவிகேட்டு மவர்கள்வினையகல
செய்யாதிருப்பதுனக்காதென்பழனிபுரிவா
ழையா கடைக்கண்ணோக்கின்றகால மறிந்திலனே

ஓராறுமுகமும்பன்னிருவிழியுமுடலுமொன்றாய்
யீராறுகரமும்வள்ளிதெய்வானையிருபுறமும்
கூரானவேலும் பொன்மயின்மீதிலேறியென்குறையதனை
தீரதீர்த்தருள்புரி தென்பழனியப்பாயுன்தெரிசனமே.

திருமால் மருகாவென்றுனைவாழ்த்ததினந்தினமும்
புருகாத நெஞ்செனக்கேன் படைத்தாய்யெனக் கொருவர் துணை
வருவாரெவருமிங்கில்லையே வல்வினையகற்றி
தருவாயெனக்கருள்பழனியப்பா நல்லதருணமிதே.

நாடுஞ்சதமென்றிருப்பமென்றால் குடிநாமிருக்கும்
வீடுஞ்சதமாகயிருக்கிலேன் வினையால்மெலிந்து
பாடும்படுவது கணக்கில்லையேயிந்தப்பாவிநெஞ்சம்
தேடுந்திருவடிச்சதமென்றெண்ணிதியங்குவதே.

ஊருஞ்சதமென்றிருப்பமென்றாலெனக்கொருவர் துணை
யாருஞ்சதமில்லை மனைமக்கள் தானில்லையென்மேலன்புவைத்து
பாருங்கடைக்கண்ணெமதூதர்வந் தென்பக்கத்திலே
சேரும் வினையருப்பாய் பழனிபுரிவாழ் சேவகனே

ஆலமுண்கின்றவெம்பெருமானவரளிக்கவந்த
பாலனாறுமுகமாமணியேயென்பக்கத்திலே
சூலமுங்கயிறுங்கைதனிற்கொண்டெனைச்சுற்றிவருங்
காலன்யெனைத்தொடாதருள்புரிவாய்பழனிகந்தப்பனே.

ஆடுமயின்மிசைந்தோன்றியும்வேல்கொண்டசுரர்களைத்
தேடுமமரர்சிறைமீட்டும் எங்கும் திரிந்தலைந்துச்
சாடுந்திருச்செந்தூரில் தெய்வானையைமணந்தடியார்
வாடும் வினையருப்பாய் பழனிபுரி வடிவேலவனே

பெற்றும் வளர்த்தும் பால்தனைக்கொடுத்தும்பிள்ளை பள்ளிதனில்
வைத்தும்பலவிதநூற்களைக்கற்றுஞ்சரஸ்வதிவாக்கதனாற்
பத்தும்பதிகமும்பாடியுன்பதமலர்ச்சாற்றியதை
சற்றுந்தயவுவைத்தாள்வாய் பழனிபுரிசண்முகனே.

## வேலூர் வைத்தியநாத சுவாமிபேரில்.

கோவெங்கிடாசலமும் குன்மவலிதோன்றினதால்
சீவேழந்தன்னடியைச்சேவித்தும்மாவுலகில்
வேலூர்வைத்தியனூர் மெல்லியாள் தைலம்மையை
நாளுந்துதித்தொழிந்தால்கி.

னைவினில்வந்துகாலுசமுத்திரமுமொன்ருய்காட்டியெந்தன்
மனமதுநடுங்க வைத்தியநாதாதையனாயகியென்
ஜெனமும் விட்டுச்சீவனும் வெளிப்படயென்செய்வ னென்றேன்
மனமதுயகிழ்ந்தென்னை யாள் தையனுயகிநாயகனே.

உன்மனமானதெளியேன் படுந்துயருள்ளங்கொண்டு
என்வினைதீர்த்தயென்னப்பனே வயித்தியனுதா
கன்மனக்கொடியனைநன்மனதாக்கிகருணைசெய்துநின்
னன்பரைப்போ லெனையாள் தையனுயகி நாயகனே

எட்டுத்திக்கிலிருக்கின்ற யன்பர்கள் ஏகதுன்பம்
பட்டுப்பொருக்கமுடியாமல் வந்துன்பாதத்தில் விழ
தொட்டுத்திரு நீரவிழ்தம்தெரித்தவர் துன்பமதை
விட்டோடச்செய்தெனையாள் தையனுயகிநாயகனே.

எட்டாத புஷ்பம்எட்டிகையாலகப்பட்டமட்டும்
கட்டைகையாலகப்பட்டமட்டும்வைத்துகட்டியமேல்
பட்டாடைசுற்றியுன்பதமலர்சாத்தியப்ண்மலரை
வெட்டாதகொண்டெனையாள்தையனுயகி நாயகனே

தாயாரெனக்கமுதூட்டியும் வளர்த்துமித்தாணிதனில்
நீயாருடன்சலந்திருக்கவைத்தாயெளியேன்தேகமதில்
ஓயாமல் வல்பிணியுண்டு பண்ணுயதுயுனக்கழகா
பேயாதெனக்கெழுந்தருள் தையனுயகி நாயகனே.

வேளூர்வைத்தியநாதாயெனக்குள்ளவினையதனை
நாளுமும்முடன்சொல்லி வந்தேனதில்அன்புவைத்து
கேளுங்கேட்டருள்செய்திடவேண்டுமுன்கிருபையென்மேல்
நாளுமிருக்கவருள் தையநாயகி நாயகனே.

ஐயாவேளூர் வைத்தியநாதா யென்வினைகளெல்லா
மெய்யாயுரைத்திடயரிந்திருந்துமவ்வினையகலச்
செய்யாதிருப்பதுயென்குறையோயேழையேனுக்கிறங்கி
ஐயாயெனக்குவந்தருள்தையநாயகிநாயகனே

அத்தனேவேளூர் அமர்ந்தநாயகனே அன்பருக்கன்பனுனவனே
சித்தனேயடியார்வினையருப்பவனே செல்வமேசிறுடைக்கடலே
எத்தனைகுற்றம்னின்னடிதனக்குயேழைநான்செய்திருந்தாலும்
அத்தனையும்பொருத்தாள் தையநாயகிநாயகனே!

பார்க்கும்பொழுதுவேளூர்வைத்தியநாதன்வினைதீர்க்குந் தெய்வம்
அவரன்றியே வேறோர்தெய்வமில்லை
யார்க்கும் நினைந்து அவன்ருள்வணங்க அவ்வினையதனை
தீர்க்கும்யெனக்கு வந்தருள் தையநாயகி நாயகனே.

அப்பனேவேளூரமர்ந்தமாமணியே அன்புவைத்தேழை யேன்குன்மம்
எப்படிபிழைப்பேனென்றனை வருந்தயேழையென்வினையையருத்தீர்
தப்பிதமேது செய்திருந்தாலும் யென்தந்தையேபொருத்தருள்செய்யு
லாவடியைச் சரணமென்றடைந்தேன் உண்மையாய்கார்ப்பதுன்
[கடனே.

## திருப்பதி வேங்கடாசலசுவாமிபேரில்.

நாருயணுவென் றுக்கூப்பிடுவேணந்தவேளையிலே
கூானகருடன்மீதேறிவந்துயெளியேன் குறைகளையும்
தீராதநோயுந்தீர்த்தெளியேன்முகம்உன் திருமுகத்தால்
பாராமல்நீயிருந்தால் யெனக்கார்வரம்பாலிப்பரோ,

திருப்பதிவேங்கடேசா தேவியும் நீயுமாக
விருப்பம்வைத்தேழைமீதில்வேகமாய் கருடனேறி
அருட்பதம் தருகவெண்ணி அன்பர்கண்களிக்கமண்மேல்
திருப்பதம் காட்டியன்பர் தெரிசிக்கவருவாய்போற்றி.

இஷ்டனே கிஷ்டனென்றும்வேறுகதியிலையென்றிருந்தும்
கஷ்டமும்படவுமென்ன காலமும் வந்ததோதான்
அஷ்டஐஸ்வரியமிந்தஅகிலமுள்ளோர்க்குயீந்தாய்
இஷ்டமுமில்லையோகிருஷ்ணயேழையோர்களிக்கத்தானே.

நாருயணவென்னுமந்திரமேயொருநாள்தவரா
பாராயணம்பண்ணுமன்பரெல்லாமவர்கள்படுந்துயரம்
தீருய்தீர்த்தருள்செய்திடவேண்டும் உங்கள் தேவியுடன்
வாருயன்பர்க்கருள்செய்திருப்பதிவாழ்வேங்கிடாசலமே.

ஆதிநாருயணவென்றுன்னையன்பர்களல்லும்பகலும்
ஓதிக்கடைக்கண்ணீற்பெருகபவர்கள் உள்ளமதை
சோதித்துப்பார்த்துத்துயர்தனைநீக்கிஉங்கள்தரிசனமும்
வீதிக்குவந்துதருவாய் திருப்பதிவாழ்வேங்கடாசலமே.

ரங்கநாதாவென்றுஅன்பர்கள் கூப்பிடாகுபதிநீர்
யெங்ஙுநிரைந்திருக்கின்றயென்னப்பன்யேழைக்கிரங்கி
அங்கம்யொடுங்கிக்கருடன்மீதேறி அந்தரத்தில்
யிங்குவந்தருள்தருவாய் திருப்பதிவாழ்வேங்கடாசலமே

ஏகமாய் சங்குநாதம் யிடிகின்றசத்தங்கேட்டு
தாகமும் எடுக்கத்தண்ணீர்தவிக்கின்ற தன்மையைப்போல்
நாகவாகனமேயேறி நான்படுந்துயற்ருராமாநீர்
வேகமாய்வரவும்வேணும்வினையனேர்க்கருள்செய்வாயே.

அம்புவிதன்னில்யேகயன்பர்யுன்சன்னதிக்கி
நம்பியே தீர்ப்பாரென்று நடந்தவர்கோடிகோடி
பம்பரம்தனைப்போல்பார்க்கும்பலவினைதீர்த்துக்கிருபை
தெம்புகொண்டன்பரெல்லாம்தெரிசிக்கவருவாய்போற்றி.

மாதுகண்ணென்றேடொன்று மங்கைலட்சுமியிருக்க
வதுக்கபலார்பெண்ணையெடுத்துநீர்சிறையிலிட்டீர்
வாதுக்குவழக்குறைத்து மடிபிடித்திழுக்கவந்தாய்
போதுமேஅப்பாகிருஷ்ணபிதுபொல்லாதலீலைதானே.

## ஸ்ரீமுத்தாலம்மன்பேரில் வெண்பா

திருவதிகைத்தென்கிழக்கிற் செப்புகின்றேன் மூன்றுமைல
நருமலர்சூழ்நடுவைநகர்நாயகியாம்—திருவளரும்
முத்தாலுமாரியம்மன் மூளைமுகம்போட்டமுத்து
எத்தாலுந்தாவிரக்குவள்.

சென்னைபுரிமாநகரில் செங்கழனிமாரியம்மன்
அன்னையெனக்கவள் அவிரயாருமில்லை-முன்னஞ்செய்

வினையறுக்கவல்லவளாம் வேண்டும் வினைதீர்ப்பவளாம்
எனை வளர்க்குந்தாயாரிவள்,

### கட்டளை கலித்துறை.

பெரியம்மைமுத்துநீயே யெடுத்தந்த பிள்ளைகள்மேல்
நீயெரிகின்றகாலம் போரூதகிரகமுமெதிரிட்டதோ
வெரிகொண்டு சுற்றவும் யெமதூதர் வந்தங்குவேடிக்கையாய்
திரிகின்றகாலமும்வந்ததென்றேபாலன் தியங்கியதே.

பனையேறிமுத்துநீயே யெடுத்து அந்தப்பாலகர்மேல்
வினையால் விளைந்ததியென்றல்லவோமுத்தைவிட்டெரிந்தாய்
அனைவோருங்கூடி யழுதாற்பயனென்ன அந்தகனும்
புனல்சேர்கடாவின்மீதேரி காலன்புரப்பட்டதே.

### விருத்தம்.

போரூதகிரகமது அம்மம்மைஎன்தாயேபுகுந்தெனது திரேகத்திலே
போதும்போதுமெனவேவாதிக்குதென்செய்வேன்பொருக்க வென்னாலா
[குமோ
தீரூதநோயுபிணிகொலைவது சிரங்குகள் யென்திரேகத்தி னிரைந்திருந்து
தினமுமிப்படிவதைந்திடவும்பார்த்திட நீரூததென்னகுறையோ

யாரூலுமருந்துகள்வாங்கியேதின்றதுயளவிடக்கணக்குமில்லை
யணுவளவுமென்திரேகம் விட்டுவிலகாமலதை யடியனாற்சொல்லதிரமோ
பாரூமநீயிருந்தாற்றந்தைதாயுமிலை பரதேசி யுரவுமில்லை
பார்க்குமிட நடுவைநகர்மங்கையிடம்வாழ்கின் றபலமுத்துமாரியுமையே.

(நாட்டை ரூபகதாளம்)

### கீர்த்தனை.

வந்து வந்துபாரேனம்மா யென்வல்வினையை தீருமம்மா

அனுபல்லவி.

நொந்து நொந்துபென்மனது உந்தன்மலர்பாதந்தன்னை
எந்தவிதம்யான்தொழுதும்யிரங்கலையோ யுன்மனது வந்து

சரணங்கள்

நடுவைநகர்வாழ்பவளே ஞாபகிமுத்தாலம்மையே
அடிமையென்னைக்காப்பவளே அன்புவைத்துக்காருமம்மா (வ

அங்கமுத்துமாரியரே அகிலமெல்லாமாண்டசத்தி
எங்கள்குலதேவியரே இரங்கலையோயுன்மனது வந்து

[illegible]ஞ்சிநகர்வாழ்பவளே கோத்தமுத்துமாரியரே
பரிந்துவினைதீர்ப்பவளேபக்ஷம்வைத்துக்காருமம்மா வந்து

வேதாந்தமாரியரே வில்லியனூர்வாழ்பவளே
பாதாரம்யான்பணிந்தேன் பக்ஷம்வைத்துக்காருமம்மா வந்து

வீராம்பட்டணமமர்ந்த மெல்லியரே அங்கமுத்து
பூராமநீயிருந்தாலிந்தப்பாலன் பிழைப்பதேது வந்து

சென்னைபுரிவாழ்பவளே செங்கழணிமாரியம்மா
அன்னையெனையாள்தொழுதேன் அன்புவைத்துக்காருமம்மா வ

படைவேடமர்ந்தவளே பால்பசுவை திண்ணசத்தி
கடையேன் துதிக்கிறங்கி கருணைசெய்யவேணுமம்மா வந்து

ஆனந்த வருஷத்திலே ஆனிபதினெட்டாந்தேதி
வானவர் துதிக்குந்தாயே வந்தனம்மாநெல்லிக்குப்பம் வந்து

அச்சுக்கூடம்தேடியல்லோ அன்புடனே யுந்தன்பாடல்
இச்சையாகயான்பதித்துஇதைஎங்கும்தெரிவித்தேனம்மா வ

பல்லவி.

தாயேமாரிமுத்தாலம்மையே தயங்குமனத்தினையுமயங்க
வொட்டாம நீயும் பயங்கொள் வினையறுத்துச்செயம்
பெறச்செய்யுமென்றன் தாயே

அனுபல்லவி.

நீயேலோகநாயகி நின்பாத தெரிசனம்
நாயேன்கண்டு துதித்து நல்லவரமருள்செய் தாயே

சரணங்கள்

ஊரும்நடுவை நகர்பேருமுத்தாலம்மைக்குத்
தேரும்திருவிழாவிற்சேருமன்பர்களெல்லாம் வாரும்
யெனவழைத்துப்பாரும் கடைக்கண்ணாலே தீரும் வல்வினை
தன்னை சேரும் உன்பதமலர் தாயே

ஆடிமாதத்திலுன்னை தேடிவருவார்சிலர்
நாடியுன்பாதமலர்கூடியன்பரெல்லாரும்
பாடியுன்பதமலர் சூடியமாலைதன்னை
மோடிசெய்யாமல்நீயும் தேடியுட்கொள்ளுமென்தன் தாயே

எங்கும் புகழ்படைத்துத் தங்கும் நடுவைநகர்
சங்கந்தொனித்துவர யிங்கு வந்துநீயமர்ந்தா
யங்குமுத்துமாரியரே பங்கப்படுத்தாமநீயும்
அங்கமதில்முத்திரைக்கியெங்களைரக்ஷிக்குமென்தன் தாயே

## கயிலாயநாதர் கோயில் நாயகர் பேரில் கலித்துறை.

பிட்டுணர்வதனால் வந்தியாள்நிமித்தம்பெருங் கரை படைப்பதற்
[கெண்ணி
தட்டுமண்சுமந்துவைகயங்கரையில் தனியனுயன்பர்கண்களிக்க
கொட்டவுகைக்கைதடைபடாதகலக்கோரமாய்பாண்டியன்பிரம்பால
பட்டுமேமணாந்தோர்நடுவைமாநகர்வரும்பரமனேயற்புதமறியேன்

வந்தியாணிமித்தம் வைகயங்கரையில் வந்திடுங்கூடல்நாயகனும்
சுந்தரவேடந்தன்னையுமறைத்துத்தோள்கொட்டுந்தட்டுகையேந்தி
பெந்தனைக்கூலியாளதுவாகயெவர்கொள்வாரென்றுமேகூவி
வந்திடும்நடுவைமாநகர்தன்னில் வருகின்றவற்புதமரியேன்

அருபத்துநாலுதிருவிளையாடலன்புடன்செய்கின்றததிலே [தம்
ஒருபத்தந்தனக்காகுழந்தையையருத்துயுண்பதே யுனக்கது அமிர்
தருமுத்திகொடுத்துநின்னடிசேர்க்கும்தற்பருயேழைவன்றனக்கு
அருள்முத்திகொடுக்கும்நடுவைமாநகர்வரும் அப்பனே அற்புதமரி
[யேன்.

கல்லடிபட்டும் கண்ணப்பன் செருப்புக்காலினாலுதைக்கவும் விசயன்
வில்லடிபட்டும் யிவையெலாமுமதுமேனியிலெவ்விதமுளதோ
மல்லிகைமலரோமுல்லை செண்பகமோமனம்பொருத்தருள்செயும்பரனே
அல்லலைதீர்க்கும் நடுவைமானகர்வரும் அப்பனே அற்புதமரியேன்.

## குரு சிஷ்யனுக்குபதேசித்தல்

மண்டபமொன்றுண்டாக்கி மான்மழுதரித்தோன்றன்னை
கண்டிலையெவர்க்குமிங்கேகலசஆவகனம்செய்து
தொண்டர்கள் குருவைச்சார்ந்து துதிக்கும் நற்சிவயோகத்தை
புண்டரநுதலில் நீறுபூசியும் செபித்திட்டாரே.

பூசியும்செபித்தவார்த்தை புந்தியுளடக்கம்செய்து
வேசியை விடுத்துக்காமன் விடுங்கணை விலக்கிமூழ்கி
மாசிலாமணியை முக்கால் வணங்கியும் செபித்துநிற்க
தேசிகனாகபின்னும் சிவன்கழல் சேர்வார் கண்டீர்

### வெண்பா.

அருணாசலமென்றழைத்தாலு மரன்செவிக்கி
யொருநாளுங்கேட்காதோ உண்ணாமலைதன் திருச்செவியில்
கேளாதோகடையன்மொழிகேட்டிருந்து மூமையைப்போல்
நாளாக யேனிருந்தாய் நல்கு

வேதக்குதிரையுளான் விண்ணோர்தொழும்பாதன்
பூதப்படையுடையான் புரமூன்றெரித்தோன் ஆதவனும்
மதிநதியுந்தரித்தபிரான் வார்சடையானெம்பெருமான்
கதிதருவான்கடையேன்றனக்கு

சென்றயுகந்தனிலே சென்றவன்பரடைந்தவடி
யென்றுசென்று நானடைவேனெம்பெருமான் கன்றுருகி
தாய்தேடிப்போனதுபோல் தமியேன்படுந்துயர்க்கு
நீவந்தாட் கொள்வதுரை

### கீர்த்தனை.

#### பல்லவி.

என்னகுறைசெய்தேனோநின்பாதத்திற் கென்னகுறைசெய்தேனோ

#### அனுபல்லவி.

அன்னைதந்தையென்று அனுதினம் தொழுதேனே
என்மேல்பராமுகமாயிருப்பதுயேனையா (என்

#### சரணங்கள்.

மல்லிகைமுல்லைகொண்டுன்மலரடிதோழுதேனே
கல்லுங்கரையுன்மனம் கரையாதிருப்பதேனோ (என்
சந்தணம்பன்னீர்கொண்டுன் தாளினைத்தொழுதேனே
எந்தவிதம்யான் தொழுதுமிரங்கலையோ வுன்மனது (என்
பாலசுப்ரமண்யாவென்றுபாதத்தில் விழுந்தேனே நீ
கோலமயில்மீதில் வள்ளிதெய்வானையுடன் பார்க்கொணாதோ

நடுவைநகரில் நின்னன்பர்தொழும் பாலா
அடிமைவெங்கடாசலத்துக்கருள் தரும் குணசீலா                என்

## விநாயகர் துதி.

மாரியம்மன் தன்கதை வாழ்த்துதற்கு ஐங்கரனைக்
கோரிக்கை செய்துநின்று கும்பிட்டேன் வேறில்லையென்
காத்தருள வேணுமென்று கற்பகவிநாயகனை
தோத்திரங்கள் செய்தேன்றனே



## சுப்பிரமணியர் கலித்துறை.

ஓராறுமுகம் ஈராறுவிழி உடலென்றதுவாகி
ஈரார்கரம் கூர்வேல் தரித்திருமாதுடன்மயில்மேல்
வாராய் வரந்தாராய் வடிவேலாயுமை பாலா
பாராய் கடைக்கண்ணால் யுந்தன்பாதம் நமஸ்காரம்

## விருத்தம்.

போராதகிரகமது யம்மம்மாயென்தாயே புகுந்தென துதிரேகத்திலே
போதும்போதும்யெனவே வாதிக்குதென்செய்வேன்! பொறுக்கயென்னு
[லாகுமோ
தீராதநோவு பிணிகுலைவலிசிரங்குகள் யென்திரேகத்தில் நிரைந்திருந்து
தினமும்யிப்படிவதைந்திடவும் தினமும்நீ பார்த்திடவும் தீராதென்னகு
(றையோ

யாராலும் மருந்துகள்வாங்கியே தின்றது அளவிடகணக்குமில்லை
அணுவளவுயென்திரேகம் விட்டுவிலகாமலதை யடியனாற்சொல்லதிறமோ
பாராமநீயிருந்தால் தந்தைதாயுமில்லை பரதேசியுறவுமில்லை
பார்க்குமிடம் நவைநகர்மந்தையிடம் வாழ்கின்ற பலமுத்துமாரியுமையே

## கலித்துறை.

மண்கொண்டவுலகத்தில் நடுவாபுரிவளர் மாரியம்மன்
விண்கொண்ட தேவர்க்கும் ரிஷிகட்கும்மாந்தற்குமவர்கள்வினையகல
தண்கொண்ட முத்தை பூற்றிடுவாள் பின்னும் தானிரக்கும்
கண்கண்ட தெய்வம்யவளன்றி யுலகத்தில் கண்டிலேனே

மாரியென்றன்பர் நடுவாபுரிவளர் மந்தையிடம்
கோரிக்கை செய்யவும் ஸ்தலமொன்றிருக்குது சிறுகுழந்தைகளும்
வேறில்லையென்வினைதீர்ப்பதற்கோ வென்றுவேண்டுமனம்
பூரித்து அவர்வினை தீர்ப்பவளாம் அந்த பூங்கிளியே

மாதாயெனவுனை அன்பர்கள்வந்து வருந்திமனம் ஆதாரமாக
நடுவாபுரிவளர் அம்மைதன்னை சேதாரம் வாராமல்
காத்திடுவாய் அன்பர் தினமும்புந்தன் பாதாரவிந்தம்
பணிகின்ற பச்சைப் பசுங்கிளியே

அம்மாநடுவோபுரிவளர் மாரியம்மனவள்
சும்மாயிருக்கமனம் வருமோ அன்பர்துன்பது
எம்மாத்திரம் செய்துயிருந்தாலும் அவளுக்கிதங்கிமனம்
தம்மாலகற்றிடுவாள் மருளரைக்கார்க்கும் தயாபரியே

யெந்தாயெனக்கவள் நடுவோபுரிநடுமெந்தைதயிடம்
வந்தாதரித்திடயமர்ந்திருப்பாள் அவள்வல்லமையே
நந்தார்க்கும் தன்வினைபின்னமென்றவளுடன் செல்லிச்சொல்லி
வந்தார்க்கும் வல்வினைமுந்தாலு அம்மனும் வாங்குவாளே

அக்காலம் செய்தவினையிதுவோ நம்மையடுத்துவந்து
இக்காலம் வந்துவதைக்குதம்மா யேழையேன் வருத்தம்
முக்காலும் யென்றால் பொறுக்கவும் வசமில்லை முத்தாலம்மை நீ
எக்காலம்செல்லுமோ யேழையேன் வினைதன்னைதீர்ப்பதற்கே

அந்தரியென்றும் கௌமாரியென்றும் அல்லுபகல்
நொந்ததும் உனக்கென்னதெரியாததோ யெந்தன்
நோயதனை யெந்தவிதத்திலும் சொல்லியும் பேசாமலிருப்பதும்
சந்தேகமாக யிருக்குதம்மா யெந்தன் தயாபரியே

தருணம்தருணம் யென்றுன்னடிதாழ நல்லசமயமென்று
சரணம்வுன்பாதம் வந்தடைந்தேன் நல்லதருணமிது
கருணைசெய்யவும் யிதுகாலமென்றே உந்தன் கழல்பணிந்தேன்
வருமம்செய்வது உனக்கழகா யெங்கள் மகேஸ்வரியே

நித்தம்வந்துந்தன் சன்னதிக்கெதிரில் நெய்க்கழல்போல்
பெத்தும்வளர்த்தயென் தாயாரேயுன்மீதிலென்மனமுருகி
பத்தும்பதிகமும் பாடும்உன்மீதினில் பாவியென்மேல்
சற்றும்தயவுவைத்தாள் நடுவோபுரிவளர் தயாபரியே.

காம்போதி    அடதாளம்.

பல்லவி.

முருகா உன்னை தேடி நாடி முகமும்சோருதே
எந்தன் மனமும்வாடுதே

149056

அனுபல்லவி.

குருவாகியும் அரனுக்குபதேசம்
திருவாய்மலர்ந்தருளிய சண்முக குகனே

சரணம்.

ஆறுமுகம் பன்னிருகையும் வேலுடன் அசுரரை வென்றாயே
இங்கேவாரும் பழனிமால்மருகா உன்னைத்தேடி
வரவோபிது குறைவோ வரந்தரவோ நல்லசமயமிது    முரு

அன்னைதந்தையென்றுன்னை நினைந்துயான் அலைந்து திரிந்தேனே
என்னைகார்க்கமனம் இன்னம் முருகாஉனக்கில்லையா எமன்
வலையேதினம்படவாதெனக்கருள்வாய்எனை    முரு

பாசவலைக்குள்ளகப்பட்டுழன்றுயான்மோசம் அறிந்திலையா
வாசம் உன்சன்னதி நேசம் உன் அன்பரிடம் வருவாய்
யெமன்வருகா வரந்தருவாய் என அருள்வாய்தினம்    முரு

வள்ளிக்காசைபட்டு வனமும் தினமும் சுத்தி மயங்கி
திரிந்தாயே அவன்அள்ளி ஒருபிடிமாவு வள்ளி தின்னப்போட்டு
அன்பாய் அவள்தந்தாள் அதைதின்றாய்மையல்கொண்டாய்தினம் மு

வனத்தில் வேங்கை மரமாகி நின்ருய் வனவேடுவர்கண்டாரே
அவர்மனத்தில் இந்தமரம் யேதென்றெண்ணி யெண்ணி
வருவோம் தரித்திடுவோம் மரித்திடுவாள் வள்ளி நிழலாகியே முரு

பாடும் அன்பர்க்கருள் தன்னையே நீயிந்தபாவிக்களிக்கவொண்ணுதா
மனம்வாடும்யேழைக்குபகாரம் செய்வாயென்றுவரவோ
இது குரைவோ வரந்தரவோ நல்ல சமையமிது வரந்தரவோ முரு

நடுஜவாகர் ஸ்தளம்வீற்றிருக்கும் சண்முகநாதா உந்தன்
அடிமைவெங்கிடாசலத்துக்கருள் செய்யும் ஐயாயிது
மெய்யேமாது வையாபுரிசெய்வாயிது முரு

கோவெங்கிடாசலம் பாடுந்தமிழ்க்கருள் கொண்டுமனக்குறையாற்றி
உன்னை நாவாரவே யுன்னைத்தேடித்தினந்தினம் நாடி
உனைப்பாடி முகம்வாடி அருள்தாதா முரு

## மோனம் ரூபகதாளம்.

பல்லவி

தினம் தினம் மனம் கல்விமலர்தன்னை தேடிதிரிந்தலேந்தாண்டி
பதம்பாடி அச்சில் பதித்தாண்டி

அனுபல்லவி.

வனந்தனிற்சென்று சித்திவிஞயகன் வார்கழல் தன்னையே
யோர்தினம் பூசித்து தினம்

சித்திவிஞயகன் கோவில்புகுந்துமே சுத்திவலமாய் வந்தாண்டி
வெகுபக்தியுடன் பணிந்தாண்டி அன்பன்தாண்டி தினம்

ஓராறுமுகமும் பன்னிருகையும் உடலுமொன்ருய் பிரந்தாண்டி
அலைகடல்மீனுய் பிரந்தாண்டி முருகன்தாண்டி தினம்

அன்னைபிதாதெய்வமென்றெண்ணியே அன்புடன் பணிந்தாண்டி
வெகுதெம்பாய் பதம்பாடிஞண்டி அன்பன்தாண்டி தினம்

வேதகுதிரைமேல் சேவகனுகவே வேடிக்கையாக வந்தாண்டி
வாதவூரன்சேவித்துக்கொண்டாண்டி சொக்கர்தாண்டி தினம்

நரியைப்பரியாக்கி கூட்டங்கூட்டமாக நாட்டில்நடத்திவந்தாண்டி
குதிரைக்கூட்டத்தில் சேர்த்துவைத்தாண்டி தினம்

பரியை நரியாக்கிமதுரைப்பட்டணத்தில் பார்க்கயெரச்சலிட்டாண்டி
யிதையார்க்கும் தெரியவைத்தாண்டி தினம்

வாதவூரன்தன்னைபாண்டியன்கொண்டுபோய்
வைகைகிருத்திவைத்தாண்டி சடைகேருகையெடுத்துவிட்டாண்டி தினம்

சுந்திரவேடம்தன்னைமரைத்துமேதோள்கொட்டும்தட்டும் கொண்டாண்டி
கூலியாளென்றுகூவிவந்தாண்டி தினம்

வாணிச்சிப்பிட்டுக்காசைவைத்தேயீசன் வைகையில்மண்சுமந்தாண்டி
கையில்வாங்கியே தின்ருண்டி தினம்

வார்சடைமீதில் மண்ணை சுமந்து வைகையில்கொட்டக்கண்டாளே
கையால்கும்பிட்டுக்கொண்டுபோருளே கெங்கையாளே தினம்

பாண்டியன்கையில் பிரம்புகொண்டே வைகை பார்க்க நடந்துவந்தாண்டி
சொக்கர்வேர்க்கப்படுத்திருந்தாண்டி அடித்தாண்டி தினம்

பட்ட அடிதன்னை யெல்லா சீவர்கட்கும் படவும் தழும்பேத்தினாண்டி
அரசன்தொடவும் தன்திரேகம் பார்த்தாண்டி யழுதாண்டி தினம்

மயிலம்சுப்ரமண்யம்மாசிமகம்தன்னில்வார்கடல்தன்னில் சென்றாண்டி
அங்குநீராடி புதுவை சென்றாண்டி முருகன்தாண்டி தினம்

சந்தணம் பன்னீர் கதம்பகஸ்தூரிகள் தானபிஷேகம்செய்தாண்டி
பின்னும்வேணுமபிஷேகம் செய்தாண்டி தினம்

பட்டுபீதாம்பரம் ஆபரணமுதல் பக்தியாய்கொண்டு வந்தாண்டி
குருக்கள் சுத்தியலங்கரித்தாண்டி அன்பன்தாண்டி தினம்

மல்லிகைமுல்லை பாதரி சாமந்திமாலை தொடுத்துவந்தாண்டி
முருகன்மீதில் தரித்துவைத்தாண்டி அன்பன்தாண்டி தினம்

அன்னவேத்தியம் பலவிதமாகவே அன்பாய்குருக்கள்
செய்தாண்டிவெகு இன்பமாய் கொண்டுவந்தாண்டி தினம்

மேளவாத்தியமத்தள தாளங்கள் விதவிதமாகச்செய் தாண்டி இதை
சதமாய் என்னாளும் செய்தாண்டி அன்பன்தாண்டி தினம்

தீபஆராதனைசெய்வதற்காகவே சென்றனர்கோடானுகோடி
அங்குநிறைந்தனர் முருகனைநாடி அன்பாய்பாடி தினம்

தீவட்டிமத்தாப்பு வாணவேடிக்கைகள் செய்தனர்கோடானுகோடி
மழைபெய்தது மேகம்போல்கூடி முருகனை நாடி தினம்

வேதகோஷ்டங்களும் பஜனைகூட்டங்களும் வீதிவலமாய்வந்தாண்டி
யிருகாதம் சென்றாண்டி மயிலம் சென்றாண்டி தினம்

## •திருக்கண்டீச்சரம் நடனபாதீஸ்வரசுவாமி

### திருவிருத்தம்.

கற்றவர்யாவரேனும் கருதியநூல்களெல்லாம்
உற்றதைப்பார்க்கவேண்டும் அதற்குட் பொருளறியவேண்டும்
மற்றவர்செவிகொடுத்து வாசிக்க கேட்கவேண்டும்
நற்றுணைமலராள் பாதம் நாளுமேவணக்கம்வேண்டும்

சுந்மரமடியாரோடே தூயதோர் ஸ்தலங்களெங்கும்
முந்தநான்சென்றுபாடி அம்மூர்த்தியின் மனமகிழ்ந்து
தந்ததோர் பொருளைவாங்கி தன்னிடம்வந்துபாட

திந்திமியென நடிக்கும் திருக்கண்டீச்சரத்துளானே
அப்பனேநடனபாதா அடியவர்க்கருள்சுரக்கும்
ஒப்பிலாமணியே யெந்தன் ஊழ்வினையதனால் நொந்து
எப்படிபிழைப்பேன் ஐயோ யேழைமேற்கிருபைசெய்யும்

செய்பியவன்பர்போற்றும் திருக்கண்டீச்சரத்துளானே
ஆடியதிருக்கூத்தெல்லாம் அன்பருக்காக நீபோய்
பாடியபண்ணோர் பாணப்பத்தனுக்காக நீ போய்
உன்னைநாடியமதனைக்காய்ந்தும் நன்முடிபாதந்தன்னை

தேடியும் அயன்மால்காணு திருக்கண்டீச்சரத்துளானே
குருவடிவாகி வாதவூரனுக்குறைத்தும் பெண்ணால்

யிருவடிவாகி யென்பால் யிட்டதோர் அமுதையுண்டும்
ஒருவடிவாகி பாலர் உம்பர் பூமாரிபெய்ய
திருவடிகாட்டிசேர்க்கும் திருக்கண்டீச்சரத்துளானே

கல்லடிபட்டும் காலால் கண்ணப்பன் உதையும்பட்டும்
வில்லடிபட்டும் கையால் பிரம்படிபட்ட திரேகம்
மெல்லிய அடிகள்தானோ அம்மேனியெப்படியேநோகும்
தில்லையில் நடஞ்செய்யும் திருக்கண்டீச்சரத்துளானே

எத்திசைதனிலுள்ளோர்கள் எத்தியும் வணங்கிநின்றும்
பக்திசெய் அன்பர்க்கெல்லாம் பாதமும் காட்டிபின்னும்
முத்தியும் கொடுத்துசேர்க்கும் மூர்த்தியே யேழையென்பார்
சித்தம்வைத்தருளவேண்டும் திருக்கண்டீச்சுரத்துளானே

காதல்கொண்டன்பரெலாம் உன்கமலந்தனைப்பணிந்துநின்று
பாதமே கெதியென்றெண்ணி பலவிதமாலைதன்னை
ஓதவும்செவியில் கேட்டும் உன்னடியதனில் சேர்க்கும்
தீதிலா நடனம் செய்யும் திருக்கண்டீச்சரத்துளானே

தந்தையும் தாயுமான தாயாநிதியேழையென்பார் மூந்த
நாள்செய்த குற்றம்முற்றிலும் போக்கியாதோர்
சிந்தனைவாராமல் கார்த்துன் திருவடிசேர்க்கவேண்டும்
திந்திமியென நடிக்கும் திருக்கண்டீச்சரத்துளானே

காயமென்றெடுத்துவந்துன்கழல் தன்னைவணங்காப்பாவி
தூய்தோர் ஸ்தலங்கள் எங்கும் தொண்டுசெய்யாதபாவி
பேயனேன் இன்னாள்செய்த பிழைபொருத்தருளவேண்டும்
தேய்பிறைதன்னை முடிக்கும் திருக்கண்டீச்சரத்துள்ளானே

ஊரினில் முப்புராதிக்குறைத்திடும் வாத்திறலே
பாரோடும் எழுந்து இந்தபட்டணம் அழிய அன்பர்
யாரிதை யழிககவல்லார் யென்னப்பனே யடிமையென்றார்
தேரினில் இருந்துதீக்கும் திருக்கண்டீச்சரத்துளானே

ஒருபத்தன் தனக்கேநீயும் யோடிபோய்வழியில்நின்றும்
தருமத்தின் தண்ணீர்பந்தல் சயம்பெறவைத்தும் பின்னால்
வருமடியார்களெல்லாம் வாவென்றழைத்துப் போயி
திருப்புனல்கொடுத்துதீர்க்கும் திருக்கண்டீச்சரத்துளானே

வேதமே குதிரையாகவேண்டு மெய்யடியார்க்கெல்லாம்
பாதமேகாட்டிபின்னால் பாதமேகாணவேண்டி
வாதவூரடிகள்சென்றார் வந்திடு மாதுரைதன்னில்
தீதிலாஅன்பர்போற்றும் திருக்கண்டீச்சரத்துளானே

மான்மழுகரத்திலேந்தி மாதுகைத்தாளம்யேந்தி
தேன்மலர்ச்சோலை சூழும் திருக்கண்டீச்சரம் தலத்தில்
ஊன் எடுத்தன்பரெலாம் உன்திருநடனந்தன்னை
காணவுன் சன்னிதானம் கார்த்துக்கொண்டிருக்கின்றாரே

தெரிசனம் காணவேண்டி திருக்கண்டீச்சரம் தலத்தில்
வரிசையாயன்பரெல்லாம் வந்துகார்த்திருக்கநீயும்
பரிசைமதுரைதன்னில் பாண்டியன் காணவேண்டி
சரிதனைபரியதாக நடந்ததோர் விளையாட்டன்றோ.

## விநாயகர் கீர்த்தனை காம்போதி அடதாளம்.

பல்லவி

அப்பனே சித்திவிநாயகா ஆதரிப்பாய் உந்தன்
பாதம் நமஸ்கரித்தேன் அப்பனே

அநுபல்லவி

ஒப்பிலாதடியின்மீதில் முப்பழமொடுபால்வைத்து
செப்பிடுமலர்கைகொண்டு கற்பகாயுனைபூசித்தேன் அ

சரணம்

மோதகம் தேங்காயும் கொண்டு முளைப்பயிரோட திரிசமும்
பாதமதில்யான்படைத்து ஓதினேனுன் திருநாமம் அ
வல்லபையாளுடன்வாரும் ஐங்கரநாதா அல்லும்
பகலும்மெனக்கருள்தரும் குணநீதா அ
ஐந்துகரமாய் வந்து அன்பர்க்கருளும்சீலா
மெந்தநாளும் துதிசெய் வந்தருள் உமைபாலா அப்பனே

## சுப்ரமணியர் கீர்த்தனை.

பல்லவி.

என்னேரமும் வந்து சண்முகன் சன்னதியில்
யொச்சல்போடுறுயென்னடி.

அநுபல்லவி

அன்னைபொய்கையில்சென்று அணைத்தபாலகனாச்சே
ஆருமுகமாய் விளையாடும் குழந்தையாச்சே
சின்னம்சிருவயதில் சிறைவிடுத்தவனாச்சே
திருச்செந்தூர்தெய்வானையை மணர்ந்தபாலகனாச்சே என்

சரணம்

மாம்பழம்தனைவேண்டிவலமாய் வந்தவனாச்சே மாமன்கிருஷ்ண
மூர்த்திக்கும் மருமகனவனாச்சே
நாம்பலதுதித்தாலும் பேசாகுழந்தையாச்சே நாடுமன்பர்க்கருள்
செய் நாயகனவனாச்சே என்
வள்ளிதெய்வானையை மணர்ந்தபாலனாச்சே வடிவேலெடுத்தசூரன்
மார்பீர்ந்தவனாச்சே
புள்ளிமயிலேரும் பன்னிருகையனாச்சே புவனமேழுக்கும்
ரக்ஷிக்கும்பாலனாச்சே என்
நடுவைநகர் தலத்தில்நாயகனவனாச்சே நான்மறைஓதுகின்ற
நாதனுமவனாச்சே
அடிமைவெங்கிடாசலத்துக் கருள் கொடுத்தவனாச்சே
அன்பர்களுக்கிறங்கி ரக்ஷிக்கும்பாலனாச்சே என்

## வாழி விருத்தம்.

வாழிஐங்கரன் வல்லபையாளுக்கும்
வாழிசண்முகன் வள்ளிதெய்வானைக்கும்
வாழிசுந்தரமகேஸ்வரியாளுக்கும்
வாழிமாலுக்கும் மங்கைலட்சுமிக்கும்
வாழியிந்திரன் யிந்திராணியாளுக்கும்
வாழிதேவர்க்கும் ரிஷிகளனைவர்க்கும்
வாழிமாரிக்கும் மைந்தரனைவர்க்கும்
வாழியன்பர்கள் வாழ்கவும் வாழியே.

முற்றும்.

140056

913
11-28